செ.வெ.எண்.338/2009/செமதொஅ நாள்:09.10.2009

**<u>உலக செய்திகளை அறிந்து கொள்ளவும், நாட்டு நடப்புகளை தெரிந்து கொள்ளவும், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கி வருகிறார் என மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தெரிவித்தார்.</u>**

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், சோமமங்கலம் ஊராட்சியில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கூடுதல் கட்டடம், இலவச வண்ணத் தொலைகாட்சிப் பெட்டிகள் வழங்கும் விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு கூடுதல் பள்ளி கட்டடத்தை திறந்து வைத்து, 1037 பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கி, 8 கர்ப்பிணி தாய்மார்களுக்கு உதவித் தொகை வழங்கி, கலைஞர் காப்பீட்டு திட்ட அட்டைகள் 10 நபருக்கு வழங்கி விழாப் பேருரையாற்றி பேசியதாவது,

இந்த குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 44 ஊராட்கள் உள்ளன. இதுவரை 26 ஊராட்சிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள ஊராட்சிகளுக்கு 3 மாதத்திற்குள் வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் அனைவருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் எனக் கூறினார். அதன்படி குடும்ப அட்டை வைத்துள்ள அனைவருக்கும் இலவச வண்ணத் தொலைக் காட்சிப்பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் 80 லட்சத்து 15 ஆயிரத்து 321 குடும்பங்களுக்கு 2267 கோடியே 87 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 30 லட்சத்து 13 ஆயிரத்து 348 குடும்பங்களுக்கு 72 கோடியே 42 லட்சத்து 72 ஆயிரத்து 767 ரூபாய் மதிப்பீட்டில் வண்ணத் தொலைக் காட்சிப்பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. ஏழை-எளிய மக்கள் படிக்காதவர்கள், உலக செய்திகளையும், நாட்டு நடப்புகளையும் தெரிந்து கொள்ள வண்ணத் தொலைகாட்சிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. அவைகளை நல்லமுறையில் பயன்படுத்தி கொள்ளுங்கள். வண்ணத் தொலைகாட்சி உங்களுக்காக வழங்கப்படுகிறது. அவற்றை விற்கவோ, மற்றவர்களுக்கு வழங்கவோ கூடாது.

குன்றத்தூரில் நீண்ட காலமாக மின்சார வாரிய அலுவலகம் இயங்கி வருகிறது. சோமமங்கலம் மக்கள் மின்சார கட்டணம் செலுத்த வேண்டும் என்றால் குன்றத்தூர் சென்று கட்டவேண்டிய நிலை இருந்தது. மின்வாரிய அலுவலகம் சோமமங்கலத்திற்கு வர வேண்டும் என கோரிக்கை வைத்தனர். தற்போது மின்வாரிய அலுவலகம் சோமமங்கலத்தில் தொடங்கி, மின்கட்டணம் தற்போது இங்கு கட்ட நடவடிக்கை மேற்க் கொள்ளப்பட்டது.

முதலமைச்சர் கலைஞர் ஆட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட கொண்டு வரப்பட்டு 10,000 ஊராட்சிக்கு ஒரு ஊராட்சிக்கு ரூ.20 லட்சம் வீதம் வழங்கப்பட்டு, அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன என கூறினார். தமிழகம் முழுவதும் மக்கள் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பகுதிக்கு புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. சோமமங்கலம் பகுதியில் குடிநீர் பிரச்சனை தீர்க்க பாடுபடுவேன். இந்த பகுதியில் 108 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 100க்கும் மேற்பட்ட தொழிற்சங்கள் துவங்கப்பட்டு லட்சக்கணக்கான இளைர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. 25,000 ஓட்டுநர்களும், நடத்துனர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விழாவில் தனித்துணை ஆட்சியர் திரு.சி.முனுசாமி அவர்கள் தலைமையுரையாற்றினார். திருபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.டி.யசோதா, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திரு.ஆ.மனோகரன் ஆகியோர் முன்னிலையுரையாற்றினார்கள். மாவட்ட ஊரா்சிக்குழு உறுப்பினர் திரு.மு.ராகவன் அவர்கள் வாழ்த்துரையாற்றினார். முன்னதாக ஊராட்சிமன்ற தலைவர் திரு.ஆர்.சீனிவாசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். முடிவில் பள்ளி தலைமையாசிரியர் திரு.மா.சுப்ரமணியன் அவர்கள் நன்றி கூறினார். ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.க.பொன்னம்பலம், வட்டாட்சியர் திரு.கந்தசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பு.நாகரத்தினம், திருமதி சசிரேகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.